தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்துக்கு பயனாளிகள் தேர்வு

தேனி, செப்.10: தேனி மாவட்டத்தில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தில் பயனாளிகள் விவரங்கள் சேகரிக்கும் பணிகளின் தொடங்கியுள்ளது என மாவட்ட சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர்.

அரசு மருத்துவமனைகளில் பிரசவிக்கும் தாய்மார்களின் குழந்தைகளுக்கு முதல்வரின் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தின் கீழ், ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டது. அரசு மருத்துவமனையில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும், பிரசவித்த தாயையும் கௌரவிக்கும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, அதை நடைமுறைப்படுத்த அரசாணை வெளியிடப்பட்டது. இந்தத் திட்டத்தை தமிழகத்தில் செயல்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ரூ.755.83 கோடி நிதியை அரசு ஒதுக்கீடு செய்கிறது.

இதையடுத்து, தேனி மாவட்டத்தில் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட தலைமை மருத்துவமனை, மாவட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையம், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள், தாயின் விவரங்களை சுகாதாரத் துறையினர் சேகரித்து வருகின்றனர்.

இதற்காக, தேனி மாவட்டத்தில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனை, மருத்துவக் கல்லூரிகளில் இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு தங்கம் சேமிக்கும் வகையில் லாக்கர் அமைக்கப்பட்டு, அங்கு தங்கம் வைக்கப்படும். இந்தத் திட்டம் தொடங்கிய பின், அரசு மருத்துவமனையில் குழந்தைகள் பிறந்த பின் வீட்டுக்குச் செல்வதற்கு முன் பிரசவித்த தாயை கௌரவித்து, குழந்தைக்கு தாய்மாமன் தங்க மோதிரம் அனுவிக்கப்பட்டு அவர்களை வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவட்ட அளவிலான திறன் போட்டி: விண்ணப்பிக்க செப்.15 வரை வாய்ப்பு

திண்டுக்கல், செப். 10: சர்வதேச திறன் போட்டியில் பங்கேற்பதற்கான இளைஞர்கள் மாவட்ட அளவிலான முதல் கட்டப் போட்டிகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வருகிற 15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி வெளியிட்ட செய்தி குறிப்பு விவரம்:

ஜப்பான் நாட்டின் ஐச்சியில் 49-ஆவது சர்வதேச திறன் போட்டி நடைபெறவுள்ளது. இதையொட்டி, தமிழ்நாட்டு இளைஞர்கள், இளம் பெண்கள் தங்களது தொழில்திறன்களையும், திறமையையும் வெளிப்படுத்தும் வகையில், மாவட்ட அளவிலான திறன் போட்டிகள் -2026 (தமிழ்நாட்டு திறன்கள், இந்தியத் திறன்கள் 2026-2027) நடத்தப்படுகிறது. இதில் தேர்ச்சிப் பெறுவோர் மாநில அளவிலான சுற்றுக்கும், அடுத்த நிலையில் தேசிய அளவிலும் பங்கேற்பதற்கான வாய்ப்பையும் பெற முடியும். இதில் 56 தொழில் பிரிவுகளில் (3டி டிஜிட்டல் கேம் ஆர்ட், கிராபிக் டிசைன் டெக்னாலஜி, வெப் டெக்னாலஜிஸ்) தனி நபராகவும், 7 தொழில் பிரிவுகளில் குழுவாகவும் பங்கேற்று தங்களது தனித்திறனை வெளிப்படுத்தலாம். இந்தப் போட்டியில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள் தேசிய திறன் மேம்பாட்டு ஆணையத்தின் https://skilldevelopment.tn.gov.in/tnskills/ என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வருகிற 15-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. போட்டிக்கான தகுதிகள், வயது வரம்பு குறித்தும் இந்த இணையத் தளத்தில் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பான கூடுதல் விவரங்களுக்கு, திண்டுக்கல் அரசினர் தொழிற்பயிற்சிநிலையவளாகத்தில் உள்ள மாவட்ட திறன் பயிற்சி அலுவலக உதவி இயக்குநரை நேரிலோ, 0451 2970049, 9499055760 ஆகிய எண்களிலோ தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

பழனியில் வளர்ச்சிப் பணிகள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு

பழனி, செப்.10: திண்டுக்கல் மாவட்டம், பழனியில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் துர்கா மூர்த்தி வியாழக்கிழமை ஆய்வு செய்தார்.

பழனி அருள்மிகு பழனியாண்டவர் கல்லூரியில் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகம், மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து நடத்தும் கல்விக்கடன் சிறப்பு முகாமில் கலந்து கொண்டு அங்கிருந்த மாணவ, மாணவிகளுடன் ஆட்சியர் கலந்துரையாடினார். மாணவர்களின் தேவைகள், கடனை திரும்ப செலுத்த வேண்டிய தன் அவசியம் குறித்தும் மாணவர்களுக்கு விளக்கினார். நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் ரவிசங்கர், வட்டாட்சியர் மங்களபாண்டியன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பழனி அருள்மிகு பழனியாண்டவர் கலை, பண்பாட்டுக் கல்லூரியில் முன்னோடி வங்கி மூலம் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்விக்கடன் குறித்து வியாழக்கிழமை ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் துர்காமூர்த்தி. உடன் கல்லூரி முதல்வர் ரவிசங்கர்.

தொடர்ந்து தமிழக அரசின் சிறப்புத் திட்டமான தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்துக்கு பழனி அரசு மருத்துவமனையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார். இந்தத் திட்டத்துக்காக வழங்கப்படும் ஒரு கிராம் தங்க மோதிரங்களை பாதுகாப்புடன் வைக்க தயார் செய்யப்பட்டு வரும் பெட்டக வசதிகளை அவர் பார்வையிட்டார். பழனியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளைத் தரமாக விரைந்து முடிக்குமாறு அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

பழனி அரசு தலைமை மருத்துவமனை தலைமை மருத்துவ அலுவலர் உதயகுமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

முன்னதாக, ஒட்டன்சத்திரம் பகுதியில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்த ஆட்சியர் விவசாயிகளிடம் கொள்முதல் செய்து, சேமித்து வைக்கப்பட்டுள்ள கொப்பரைத் தேங்காய்கள், அவற்றின் விலை நிலவரம் குறித்துக் கேட்டறிந்தார்.

‘சான்றிதழ் பெற்ற நெல் விதைகளை மானிய விலையில் பெறலாம்’

திண்டுக்கல், செப். 10: சான்றிதழ் பெற்ற நெல் விதைகள் மானியத்துடன் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதாக வேளாண்மைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக வேளாண்மை துணை இயக்குநர்(மாநிலத் திட்டம்) ஆ.காளிமுத்து கூறியதாவது: திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 13 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் சம்பா பருவத்தில் மட்டும் 5,500 ஏக்கரில் நெல் பயிரிடப்படுகிறது.

விவசாயிகளுக்கு தேவையான தரமான நெல் விதைகளை சம்பா சாகுபடிக்கு உரிய நேரத்தில் கிடைக்கச் செய்வதற்காக வேளாண்மைத் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதன்படி, சான்றிதழ் பெற்ற விதைகளான ஏடிடி54, ஏஎஸ்டி21, கோ 55 ஆகிய ரகங்கள் நெல் சாகுபடி செய்யப்படும் வட்டாரங்களிலுள்ள வேளாண் விரிவாக்க மையங்களில் இருப்பு வைக்கப்பட்டிருக்கிறது. இந்த விதைகள் கிலோவுக்கு ரூ.20 மானியத்துடன் வழங்கப்படுகிறது. மேலும், பாரம்பரிய நெல் ரகங்களான தூயமல்லி, கொத்தமல்லி சம்பா விதைகள் கிலோவுக்கு ரூ.35 மானியத்தில் வழங்கப்படுகின்றன.

தற்போதைய நீர் இருப்பைக் கருத்தில்கொண்டு விவாசயிகள் சாகுபடிக்கான பயிரைத் தேர்வு செய்ய வேண்டும். நீர் இருப்பு குறைவாக உள்ள விவசாயிகள், குறைந்த நீர்த் தேவையுடைய சிறுதானியங்கள், பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் உளுந்து கோ 7, விபிஎன் 10, சோளம் கே 13, கோ 34, கோ 32, தட்டைப் பயறு விபிஎன் 4, பாசிப் பயறு விபிஎன் 4, விபிஎன் 5

ஆகிய சான்றிதழ் பெற்ற விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மேலும், நிலக்கடலை டிஎம்வி 14, விஆர்ஐ 10, கிர்னர் 4, கிர்னர் 5, மக்காச்சோளம் ஏடிவி 752, ஹெச்டி எம்ஹெச் 5402 ஆகிய விதைகளும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

விதைகள் தேவைப்படும் விவசாயிகள், ஆதார் எண், பட்டா, சிட்டா நகலுடன் உழவன் செயலியில் பதிவு செய்தோ, வேளாண்மை விரிவாக்க மையங்களை நேரடியாகத் தொடர்பு கொண்டோ பயன்பெறலாம் என்றார் அவர்.

திண்டுக்கல் விநாயகர் கோயிலில் லட்சார்ச்சனை

திண்டுக்கல், செப்.10: திண்டுக்கல் ரயிலடி சித்தி விநாயகர் கோயிலில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, லட்சார்ச்சனை வழிபாடு வியாழக்கிழமை தொடங்கியது.

இந்தக் கோயிலில் 78-ஆவது ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமத்துடன் யாக பூஜைகள் தொடங்கின. பின்னர், விநாயகருக்கு மகா அபிஷேகம் நடைபெற்றது. இதைத் தொடர்ந்து, முத்தங்கி அலங்காரம் செய்யப்பட்டு, லட்சார்ச்சனை நடைபெற்றது. சிறப்பு அலங்காரத்துக்கு பிறகு தீபாராதனை காண்பிக்கப்பட்டது. வருகிற 15 -ஆம் தேதி வரை நாள்தோறும் லட்சார்ச்சனை பூஜை நடைபெறும். அன்றைய தினம் சிறப்பு வழிபாடுகளுக்கு பின்னர், அன்னதானம் நடைபெறும்.

SBI — பாரத ஸ்டேட் வங்கி
மத்திய பணியமர்த்தம் மற்றும் பதவி உயர்வுத் துறை
கார்போரேட் மையம், மும்பை
தொலைபேசி: 022-22820427

கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்து விண்ணப்பிக்கவும்.

நிரந்தர அடிப்படையில் துறை வல்லுநர் பணிநிலைப் பிரிவு அதிகாரிகளின் பணியமர்த்தம்

நிரந்தர அடிப்படையில், கீழ்க்கண்ட பதவிகளுக்காக இந்திய குடியுரிமை பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன:

விளம்பர எண் CRPD/SCO/2026-27/15 (நிரந்தர பதவி)

பதவியின் பெயர்	காலிப் பணியிடங்கள்	31.07.2026 அன்றுள்ள வயது (ஆண்டுகள்)	
		குறைந்தபட்சம்	அதிகபட்சம்
வர்த்தக நிதி அதிகாரி-ஐபிஜி (டிஎஃப்ஓ-ஐபிஜி)-ஜேஎம்ஜிஎஸ்-1	14	21	30
வர்த்தக நிதி அதிகாரி-ஐபிஜி (டிஎஃப்ஓ-ஐபிஜி)-எம்.எம்.ஜி.எஸ்-II	21	23	32

இணையவழி விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க மற்றும் இணையவழி விண்ணப்பக் கட்டணம் செலுத்த, தகுதி வரம்பு (வயது, தகுதி, அனுபவம், முந்தைய பணி போன்ற பிற விவரங்கள்), காலிப் பணியிடங்களின் விவரங்கள், தேவையான கட்டணம் மற்றும் பிற விவரங்கள் அறிய, வங்கியின் **https://sbi.bank.in/web/careers/current-openings** வலைதளத்தைப் பார்க்கவும். விண்ணப்பிக்கும் முன்னரும், கட்டணம் செலுத்தும் முன்னரும் தங்கள் தகுதி மற்றும் பிற விவரங்களை உறுதி செய்து கொள்ள விரிவான விளம்பரத்தை பார்க்கவும். ஏதேனும் சந்தேகங்களுக்கு, வங்கியின் அதிகாரப்பூர்வ **(https://bank.sbi/web/careers/post-your-query)** வலைதளத்திலுள்ள **"CONTACT US" —> "Post Your Query"** என்ற இணைப்பின் மூலம் எங்களுக்கு எழுதவும்.

- **இணையவழி விண்ணப்பங்கள் பதிவு செய்ய மற்றும் கட்டணம் செலுத்தவேண்டிய தேதி: 29.08.2026-லிருந்து 19.09.2026 வரை.**

இடம்: மும்பை
தேதி : 29.08.2026
பொது மேலாளர் (ஆர்பி மற்றும் பிஎம்)

TMB Tamilnad Mercantile Bank Ltd — Be a step ahead in life
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், பதிவு அலுவலகம்: 57, V.E. ரோடு, தூத்துக்குடி
திண்டுக்கல் கிளை
எண். 9, சாலை சாலை, திண்டுக்கல் 624001
தொலைபேசி: 0451 2430708
கைபேசி: 98423 20878
Emailid: dindigul@tmb.bank.in

சொத்தை வசப்படுத்துதல் அறிவிப்பு

தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்டின் அதிகாரம் பெற்ற மற்றும் கீழே கையொப்பம் செய்துள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, செக்யூரிட்டைசேசன் மற்றும் ரீகன்ஸ்டரக்சன் ஆப் பைனான்சியல் அசெட்ஸ் மற்றும் என்போர்ஸ்மெண்ட் ஆப் செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் ஆக்ட் 2002 ன் படி செக்யூரிட்டி இன்ட்ரெஸ்ட் (என்போர்ஸ்மெண்ட்) விதிகளின் சட்டப் பிரிவு 13(12) உடன் கூடிய விதிகள் 3ன் படி **07.07.2026** அன்று எங்கள் வங்கியின் திண்டுக்கல் கிளையின் சார்பாக அனுப்பிய கேட்பு அறிவிப்பு u/s 13(2) & 3(1) SARFAESI ACT 2002 கோரப்பட்டவர்கள் **1). M/s.Manilal Textiles (பங்குதாரர்கள்)** எண்.84/63, மெங்கில்ஸ் ரோடு, திண்டுக்கல் – 624003 (கடன்தாரர்) **2). திரு.J.கார்த்திக் த/பெ திரு.E.ஜவஹர்லால் (பங்குதாரர் / ஜாமீன்தாரர்)** எண்.24-184-13, திண்டுக்கல் சௌராஷ்ட்ராபுரம் 2வது எக்ஸ்டன்சன் வடக்கு, பாரதிபுரம், திண்டுக்கல் – 624003 மற்றொரு முகவரி: எண்.24/184, பெல்பெர்க் ரோடு, நாகல் நகர், அடியனூத்து, திண்டுக்கல் – 624003. **3). திருமதி.K.சிவரஞ்சனி க/பெ திரு.J.கார்த்திக் (பங்குதாரர் / ஜாமீன்தாரர்)** எண் 24-184-13, திண்டுக்கல் சௌராஷ்ட்ராபுரம் 2வது எக்ஸ்டன்சன் வடக்கு, பாரதிபுரம், திண்டுக்கல் – 624003 மற்றொரு முகவரி: எண்.24/184, பெல்பெர்க் ரோடு, நாகல் நகர், அடியனூத்து, திண்டுக்கல் – 624003 **4). திரு.E.ஜவஹர்லால் த/பெ திரு.ஈஸ்வர ஐயர் (ஜாமீன்தாரர் / அடமானதாரர்)** எண்.24/184, பெல்பெர்க் ரோடு, நாகல் நகர், அடியனூத்து, திண்டுக்கல் – 624003 மற்றொரு முகவரி: எண்.24-184-13, திண்டுக்கல் சௌராஷ்ட்ராபுரம் 2வது எக்ஸ்டன்சன் வடக்கு, பாரதிபுரம், திண்டுக்கல் – 624003 அவர்களுக்கு அனுப்பிய கேட்பு அறிவிப்பில் 30.06.2026 தேதிப்படி கடன் பாக்கித்தொகை **ரூ.57,47,166.73 (ரூபாய் ஐம்பத்தி ஏழு லட்சத்து நாற்பத்தி ஏழாயிரத்து நூற்றி அறுபத்தி ஆறு மற்றும் பைசா எழுபத்தி மூன்று மட்டும்)** மற்றும் பின் வட்டியும் சேர்த்து அறிவிப்பு கிடைத்த 60 தினங்களுக்குள் செலுத்தச் சொல்லி கோரப்பட்டிருந்தது.

ஆனால் அவ்வாறு கடன் தொகையினை கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் திரும்ப செலுத்தாததினால் அக்கடன்தாரருக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் சகலமானவருக்கும் இதன் மூலம் தெரியப்படுத்துவது என்னவென்றால், மேற்படி சட்ட விதி: 8 உடன் இணைந்து படிக்கக்கூடிய மேற்படி சட்டத்தின் பிரிவு 13(4)ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை செயலுறுத்தும் வகையில் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்து **09.09.2026** அன்று வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் வசப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியவும்.

இதனிடையே கீழ்க்காணும் ஈட்டுச்சொத்தினை (செக்யூர்டு அஸெட்) கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் திரும்ப மீட்டுக்கொள்வதற்கு அவருக்குள்ள கால அவகாசம் குறித்த மேற்படி சட்டத்தின் பிரிவு 13, உட்பிரிவு 8ன் கீழான வகையங்களின்பால் கடன்தாரரின் / ஜாமீன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இது முதற்கொண்டு, அக்கடன்தாரருக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் மற்றும் சகலமானவர்களுக்கும் அறிவிக்கப்படுவது யாதெனில், கீழ்க்காணும் சொத்திலோ, சொத்தின் பெயரிலோ எவ்வித நடவடிக்கையும் வைத்து கொள்ள வேண்டாம் என்றும், அப்படி ஏதேனும் மேற்கொண்டால் அது தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு **04.09.2026** தேதிப்படி வர வேண்டிய கடன் பாக்கித்தொகை **ரூ.58,81,171.52 (ரூபாய் ஐம்பத்தி எட்டு லட்சத்து எண்பத்தி ஒன்றாயிரத்து நூற்றி எழுபத்தி ஒன்று மற்றும் பைசா ஐம்பத்தி இரண்டு மட்டும்)** மற்றும் பின் வட்டியையும் / செலவுகளையும் உட்படுத்தியே செய்ததாகக் கொள்ளப்படும் என்பதை அறியவும்.

சொத்து விபரம்

திண்டுக்கல் மாவட்டம், நாகல் நாயக்கன்பட்டி சப்டி, திண்டுக்கல் டவுன் ஆறாவது வார்டு, நாகல்நகர், சௌராஷ்ட்ராபுரம், மெங்கில்ஸ் ரோடு, R.S.ரோடு முதல் பெல் பெர்க் ரோடு, மேல்சர்கில் T.S. எண்.1830/17-ல் உள்ள 1463 சதுர அடி நிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள RCC roof கட்டிடம் மற்றும் அதன் EB கனெக்சன் எண்.SC.288, 326, 289, முனிசிபாலிட்டி குடிநீர் கனெக்சன் எண்.7806, கதவு எண்.13, சொத்துவரி எண்.42081 மற்றும் சகலமும் **பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது**
T.S. எண்.1830/17ல் உள்ள நாகசாமி சொத்துக்கு வடக்கு
T.S.எண்.1830/17 ல் உள்ள ரெங்கசாமி ஐயர், கிருஷ்ண ஐயர் வீட்டுக்கு தெற்கு,
T.S.எண்.1830/15, 1830/16ல் உள்ள சப்பையர் வீட்டுக்கு கிழக்கு,
T.S.எண்.1520/1 தென்வடல் மெங்கில்ஸ் ரோட்டுக்கும் மேற்கு
கிழக்கிலிருந்து மேற்காக இருபுறமும் 76 அடியும், வடக்கிலிருந்து தெற்காக இருபுறமும் 19 1/4 அடியும், மொத்தமாக 1463 சதுரடி
மேற்கண்ட சொத்து திரு.E.ஜவஹர்லால் த/பெ திரு.ஈஸ்வர ஐயர் தேவர் பெயரில் உள்ளது.

குறிப்பு:
1. மேற்கூறிய சொத்து M/s.Manilal Textiles அவர்கள் பெற்ற Term Loan கடன் கணக்குக்காகவும் பொதுவாக கடனீடாக வைக்கப்பட்டுள்ளது. (தற்போதைய நிலுவைத் தொகை 29.08.2026 தேதிப்படி ரூ.3,22,082.47)
2. மேற்கூறிய M/s.Manilal Textiles அவர்கள் பெற்ற Car Loan கடன் கணக்கும் 25.06.2026 அன்று வாராக் கடனாக வரவு வைக்கப்பட்டுள்ளது. (தற்போதைய நிலுவைத் தொகை 27.08.2026 தேதிப்படி ரூ. 13,47,274.64)

நாள் : 09.09.2026
இடம் : திண்டுக்கல்
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், திண்டுக்கல் கிளை

SBI ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளை
மதுரை
எண்.8, டாக்டர். அம்பேத்கர் ரோடு, விநாயக நகர் கிளை முதல் தளம், மதுரை - 625 020.
போன் : 0452 - 2531047
அதிகாரம் பெற்ற அலுவலர்
திரு. கிரி K
மொபைல் : 7358436672
இ-மெயில் : sbi.13165@sbi.co.in

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான, விற்பனை அறிவிப்பு

பிணைய நலன் (அமலாக்கம்) விதிகள், 2002ன் விதி 8(6)ன் கீழ் வழங்கப்பட்டது
கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) ன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு.

பாரத ஸ்டேட் பாங்குயின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அலுவலர் அவர்கள், மேற்படி வங்கி, மதுரை, ஒடுக்கப்பட்ட சொத்து வசூல் கிளைக்கு வரவேண்டிய கீழே சம்பந்தப்பட்ட கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் பின்வட்டி, பிற செலவுகளை கீழ்க் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்/களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட கொள்நிலை (physical) சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்துக்களை கீழே பட்டியலில் காணும் விபரப்படி விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் 'எங்கு உள்ளதோ அதே நிலையில்' 'என்ன உள்ளதோ அதன்படி' மற்றும் 'எப்படி உள்ளதோ அதே நிலையில்' விற்கப்படும்.

1) யூனிட்/கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: **திருமதி.S.சாந்தி ஜெயகுமார்**, க/பெ.திரு.ஜெயகுமார், வசிப்பிட முகவரி : பிளாட் எண்.527/1F1, வெற்றி விநாயகர் நகர், N S நகர், திண்டுக்கல் – 624 005. 2. சார் கடன்தாரர் : **திரு. R. ஜெயகுமார்**, த/பெ. திரு.ராமு, வசிப்பிட முகவரி : எண்.12, வேப்பந்தோப்பு தெரு, பழனி ரோடு, திண்டுக்கல் – 624 001
02.09.2026 வரை நிலுவைத் தொகை : ரூ.61,09,607/– (ரூபாய் அறுபத்து ஒரு லட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று ஏழு மட்டும்) மற்றும் பின் வட்டி மற்றும் பிற செலவுகள்.

அசையாச் சொத்துக்கள் விபரம் : சொத்து ID : SBIN86354118013 : ஆவண எண்.768/2018 நாள் 21.03.2018 ன் படி திருமதி.S.சாந்தி பெயரிலுள்ள சொத்து – திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் பதிவு மாவட்டம், திண்டுக்கல் இணை 1 சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் மேற்கு தாலுகா, சீலப்பாடி கிராமத்தில் சர்வே எண்.527/1C மற்றும் 527/1F1ல் உள்ள மனை எண்.40, கிழமேல் இருபுறமும் 30 அடி, தென்வடல் இருபுறமும் 60 அடி ஆக உள்ள 1800 ச.அடி நிலத்துடன் அங்குள்ள கட்டிடம் சேர்ந்த சொத்தின் **எல்லைகள்** ; வடக்கு : மனை எண்.25, தெற்கு : 20 அடி அகல கிழமேல் ரோடு, கிழக்கு : மனை எண், 39, மேற்கு : மனை எண்.41.
அட்சரேகை / தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : அட்சரேகை : 10.388613'N / தீர்க்கரேகை : 78.000365'E

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.43.49.000/-   முன்வைப்புத் தொகை : ரூ.4.34.900/-   ஏல உயர்வு மடங்கு : ரூ.25.000/-

2. கடன்தாரர் பெயர் மற்றும் முகவரி: **திரு.V.சகாயராஜ்**, த/பெ.வின்சென்ட் மற்றும் உத்தரவாதமளித்தவர், **திருமதி.G.M.பிரமிளா**, க/பெ.திரு.V.சகாயராஜ், எண்.4/585, ராஜகாளியம்மன் நகர், சாலையூர், கரூர் ரோடு, திண்டுக்கல் – 624 001. (விலாசம் பொது)
01.09.2026 வரை நிலுவைத் தொகை : ரூ.66,33,754/– (ரூபாய் அறுபத்து ஆறு லட்சத்து முப்பத்து மூன்றாயிரத்து எழுநூற்று ஐம்பத்து நான்கு மட்டும்) மற்றும் பின் வட்டி மற்றும் பிற செலவுகள்.

அசையாச் சொத்து விபரம் : சொத்து ID:SBIN86326901213R (ஆவண எண்.137/2001, தேதி : 29.01.2001, திரு.V.சகாயராஜின் பெயரிலானது), திண்டுக்கல் பதிவு மாவட்டம், திண்டுக்கல் இணை I சார் பதிவு மாவட்டம், திண்டுக்கல் தாலுகா, சீலப்பாடி கிராமம், மனை எண்.27 ன் மேற்புற பகுதி, 1178½ சதுரடி. அங்கு கட்டப்பட்ட வீட்டுடன் சர்வே எண்.518/1ல், C மண்டலத்தில் அமைந்தது. திண்டுக்கல் பஞ்சாயத்து யூனியன் ஆணையரால் R.Dis எண்.11097/87, நாள் 31.12.1987 மனையிடம் அங்கீகரிக்கப்பட்டது. **மனையின் அளவுகள்** ; கிழமேல் 25 அடி இருபுறமும், தென்வடல் 47 அடி கிழபுறம் மற்றும் 47½ அடி மேல்புறம். இதன் **எல்லைகள் விபரம்** ; வடக்கு – கிழமேல் ரோடு, தெற்கு – சர்வே எண்.504 ல் உள்ள நிலம், கிழக்கு – A. கிருஷ்ணனின் மனை, மேற்கு – சர்வே எண்.504 ல் உள்ள நிலம். மேற்படி நிலத்தில் அடங்கியதும் அதன் பகுதியுமான 1546.38 சதுரடி தளப்பரப்புடன் கூடிய குடியிருப்புக் கட்டிடம். **அட்சரேகை / தீர்க்கரேகை ஒருங்கிணைப்புகள் : 10.983283/76.999527**

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.43.50.000/-   முன்வைப்புத் தொகை : ரூ.4.35.000/-   ஏல உயர்வு மடங்கு : ரூ.25.000/-

மின்-ஏல விற்பனை விபரம் :

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 01.10.2026 (வியாழக்கிழமை); காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை; (ஏலம் தொடரும்பட்சத்தில் அது முடிவுபெறும் வரையான 10 நிமிட எண்ணற்ற காலநீட்டிப்புடன்)

EMD க்கான சான்று சமர்ப்பிப்பதற்கான கடைசித் தேதி : விருப்பமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலம் மூடுவதற்கு முன்பாக, முன் ஏல முன்வைப்புத் தொகையை BAANKNET ல் செலுத்தலாம்.

சொத்தினைப் பார்வையிடும் நாள் : 18.09.2026 (வெள்ளிகிழமை); காலை 11.00 மணியிலிருந்து மாலை 3.00 வரை

முன்வைப்புத் தொகை (EMD) NEFT மூலமாக BAANKNET E-WALLET –ல் வரவு வைக்கப்பட வேண்டும். (இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நிபந்தனை விபரங்களில் எண்.13-b ஐ பரிசீலிக்கவும்).

இந்த ஏலமானது **https://baanknet.com.** இணையதளம் மூலமாக ஆன்லைனில் மட்டுமே நடத்தப்பெறும். **இதன் செயல்முறைகளுக்கு குறைந்தது இரண்டு முதல் மூன்று வேலை நாட்கள் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஏலதாரரின் பதிவு மின்-ஏலத் தேதிக்கு மிக முன்னதாகவே ஏலதாரரால் செய்து முடித்துக் கொண்டிருக்கப்பட வேண்டும்.**
மின்-ஏல விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, மின்-ஏலத்தின் போர்டலில் பதிவு செய்து கொள்வதைத் தொடர்வதற்கு மற்றும் ஆன்லைன் மின்-ஏல விண்ணப்பப் படிவங்கள், உறுதிமொழி முதலியவை அடங்கிய மின்-ஏல டெண்டர் ஆவணத்திற்கு, கீழ்க்கண்ட இணையதளங்களில் உள்ள 'லிங்க்'கினைப் பார்வையிடலாம். **www.sbi.co.in & https://baanknet.com/eauction**

தேதி : 08.09.2026
இடம் : மதுரை
அதிகாரம் பெற்ற அலுவலர்
பாரத ஸ்டேட் பாங்கு

SOUTH INDIAN Bank — EXPERIENCE NEXT-GEN BANKING
தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்
முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ-ஏல விற்பனை அறிவிப்பு

Ref: RO/SAR/SN/060/2026-27   Date: 09.09.2026

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்	உத்திரவாதி
1) **திரு.முகமது பயாஷ்.** S/o.முகைதீன் பாஷா, (M/s.நேஷனல் டிரேடிங் உரிமையாளர்) எண்.83, காந்திஜி ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002. மேலும் வசிப்பிடம்: எண்.1, பள்ளிவாசல் தெரு, பெரிய பள்ளிவாசல் எதிரில், பேகம்பூர், பள்ளபட்டி, திண்டுக்கல்-624002. மேலும் வசிப்பிடம்: 37/1, நத்கர்ஷா தெரு, பேகம்பூர், பள்ளபட்டி, திண்டுக்கல், தமிழ்நாடு-624002.	2) **திருமதி.நாஜியா உசேனா.** W/o.முகமது பயாஷ், எண்.1, பள்ளிவாசல் தெரு, பெரிய பள்ளிவாசல் எதிரில், பேகம்பூர், பள்ளபட்டி, திண்டுக்கல்-624002. மேலும் வசிப்பிடம்: 37/1, நத்கர்ஷா தெரு, பேகம்பூர், பள்ளபட்டி, திண்டுக்கல், தமிழ்நாடு-624002. மேலும் வசிப்பிடம்: எண்.83, காந்திஜி ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624001.

தி சௌத் இந்தியன் வங்கி திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர் / உத்திரவாதி ஆகியோர் 08.09.2026 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) M/s.நேஷனல் டிரேடிங் கணக்கு/களில் செலுத்த வேண்டிய தொகை ரூ.76,05,276.87 (ரூபாய் எழுபத்தாறு லட்சத்து ஐந்தாயிரத்து இருநூற்றி எழுபத்தாறு மற்றும் பைசா எண்பத்தேழு மட்டும்) (As per claim in OA/278/2026-DRT Madurai) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 06.10.2026 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர்(கள்) / உத்திரவாதி(களு)க்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: **திரு.முகமது பயாஷ்**

சொத்து விபரம்: திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, பிள்ளையார் நத்தம் கிராமம், பழைய SF.No.82/1, புதிய SF.No.82/1B2-ல் அமைந்துள்ள 58.5 சென்ட் அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன் அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் பிற அடிப்படை உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு.M.முகமது பயாஷ் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, நாகல்நாயக்கன்பட்டி SRO-ல் 22.08.2019 அன்று பதிவுபெற்ற தான செட்டில்மென்ட் பத்திர எண்.4176/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்; வடக்கு: S.No.82/1-ல் உள்ள ஜெனாகிருக்கு சொந்தமான 3.5 சென்ட் இடம் மற்றும் S.No.33/2D-ல் உள்ள சொத்து, தெற்கு: S.No.82/1-ல் உள்ள 2 ஏக்கர் 59 சென்ட் நிலத்தில் 62 சென்ட் அளவுள்ள இடம், கிழக்கு: S.No.82/2A-ல் உள்ள சொத்து, மேற்கு: வடக்கு தெற்கு வண்டிப்பாதை.

சுவாதீனத்தின் தன்மை	கொள்நிலை சுவாதீனம்
நிர்ணயிக்கப்பட்ட தொகை	ரூ.45.86.400/- (ரூபாய் நாற்பத்தைந்து லட்சத்து எண்பத்தாறாயிரத்து நானூறு மட்டும்).
முன் வைப்புத் தொகை (EMD)	ரூ.4.58.640/- (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுநூற்றி நாற்பது மட்டும்). EMD தொகை 05.10.2026 அன்று 5:00 PM அல்லது அதற்கு முன்பாக செலுத்தப்பட வேண்டும்.
EMD/ விற்பனைத் தொகையை சமர்ப்பிக்கும் முறை	EMD மற்றும் விற்பனை தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் "The Authorised Officer, The South Indian Bank Ltd." payable at Madurai என்ற பெயரில் Demand Draft-ஆகவோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், மதுரை மெயின் கிளையின் "அங்கீகாரம் பெற்ற அலுவலரால்" பராமரிக்கப்பட்டு வரும் (IFSC Code: SIBL0000044) கணக்கு எண். 0044073000002184-க்கு RTGS மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும்.
சொத்து ஆய்வு	முன் அனுமதியுடன் வேலை நாட்களில் 11:00 AM முதல் 04:00 PM வரை
ஏல அதிகரிப்புத் தொகை	ரூ.20,000/- (ரூபாய் இருபதாயிரம் மட்டும்)
இ-ஏல நேரம் மற்றும் தேதி	06.10.2026 அன்று காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை)
இ-ஏல சேவை வழங்குபவர்	M/s.4 Closure, தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திரு.S.விஷால் நாத் (Mobile No.8142000735), Email Id: info@bankauctions.in and tnkl@bankauctions.in Website: https://bankauctions.in
வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள்	01.06.2020 முதல் 01.07.2026 வரை வில்லங்கள் ஏதுமில்லை

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, www.southindianbank.com மற்றும் https://bankauctions.in ஆகிய இணையதளங்களில் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை பார்க்கவும்.
ஏலங்களை கோர நினைப்பவர்கள், சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், திண்டுக்கல் கிளையை வேலை நேரத்திலோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், மதுரை பிராந்திய அலுவலகத்தில் மொபைல் எண். 9791747678 / 8281267835) ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும்.

தேதி : 09.09.2026
இடம்: மதுரை
அங்கீகாரம் பெற்ற அலுவலர்
மானு ஷாஜி - முதன்மை மேலாளர்

பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda — India's International Bank — 119 FOUNDATION YEAR — LEADING WITH TRUST

பேங்க் ஆப் பரோடா
பழனி கிளை : GR காம்ப்ளக்ஸ், ரமேஷ் தியேட்டர் எதிரில், ரயில்வே ஃபீடர் ரோடு, பழனி, தமிழ்நாடு – 624 601. போன் : 04545–245656, மின்னஞ்சல் : vjpadi@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி **"எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே"** மற்றும் **"பொறுப்பேற்காத நிலையில்"** எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
திரு.விக்னேஸ்வரன், த/பெ.முத்துசாமி **(கடன்தாரர் மற்றும் அடமானதாரர்)**, **திருமதி.கவிதா (லேட்)**, க/பெ.விக்னேஸ்வரன் **(சார்–கடன்தாரர்)**, இருவரின் வசிப்பிட முகவரி : கதவு எண்.19B, உச்சம்மண்புத்தூர், பள்ளர் வீதி, ஆயக்குடி, பழனி – 624 613.	**இனம் எண்.1 :** திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, கிழக்கு ஆயக்குடி கிராமம், பொன்னுசாமிபுதூர் ஊர்க்காட்டு, முஸ்லீம் நெசவாளர் வீதியில் க.ச.எண்.166/1, 4A1ல் பட்டா எண்.1882, 1947ல் அடங்கியதும் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டிடச் சொத்து. மொத்த விஸ்தீரணம் 1354.50 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்துடன். **எல்லைகள் ;** கிழக்கு : இனம் எண்.2, மேற்கு : சின்னபெருமாள் வீடு, வடக்கு : M.பழனிசாமி மற்றும் பிறரது நிலங்கள் மற்றும் வீடுகள், தெற்கு : சின்னபெருமாள் மற்றும் மருதமுத்து வீடுகள் மற்றும் பொது வழித்தடம். **இனம் எண்.2 :** திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா, கிழக்கு ஆயக்குடி கிராமம், பொன்னுசாமிபுதூர் ஊர்க்காட்டு, முஸ்லீம் நெசவாளர் வீதியில் க.ச.எண்.150/5B, 4A1ல் பட்டா எண்.4847ல் அடங்கியதும் அதில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புக் கட்டிடச் சொத்து. மொத்த விஸ்தீரணம் 747.25 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடத்துடன். **எல்லைகள் ;** கிழக்கு : தமிழரசியின் மீத நிலம், மேற்கு : இனம் எண்.1, வடக்கு : தமிழரசியின் மீத நிலம், தெற்கு : மருதமுத்துவின் வீடு. இரு சொத்துக்களும் முத்துசாமி மகன் திரு.விக்னேஸ்வரன் பெயரிலுள்ளது. **வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL அட்சரேகை : N 10.458753, தீர்க்கரேகை : E 77.562922 BAANKNET PROPERTY ID : BARB663120240001**	08.09.2026 தேதியன்று, ரூ.32,28,400.15 (ரூபாய் முப்பத்து இரண்டு லட்சத்து இருபத்து எட்டாயிரத்து நானூறு மற்றும் பைசா பதினைந்து மட்டும்) சேர்க்கப்பட வேண்டிய வட்டி மற்றும் பிற கட்டணங்களுடன்	28.09.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.28,90,000.00 2. ரூ.2,89,000.00 3. ரூ.25,000.00	கொள்நிலை (Physical) சுவாதீனம்	25.09.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு **https://bankofbaroda.bank.in/e-auction** மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் **https://baanknet.com** இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை **போன் எண்.04545 – 245656, மொபைல் : 94892 05933;** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
தேதி : 08.09.2026 / இடம் : பழனி
(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி), பேங்க் ஆஃப் பரோடா